**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் ஐப்பசித் திங்கள் 07-ம் நாள்
2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் நாள் வெள்ளிக்கிழமை

******

**அசல் வழக்கு எண். 295/2017 ல் இடைமனு எண். 04/2025**

V. S. ராஜேந்திரன் .....மனுதாரர்/வாதி

...எதிராக...

1. சாவித்திரி (இறந்தார்)
2. சாமிநாதன்
3. கிருஷ்ணமூர்த்தி
4. தனலெட்சுமி
5. சந்திரா .... எதிர்மனுதாரர்கள்/ எதிர்வாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 17.10.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S. சுந்தரய்யா அவர்களும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தார், 2, 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. ஆத்மநாதன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R. கார்த்திக்ராஜன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டும், 2, 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்து கொடுத்துள்ளதை அனுசரித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி PW.1-ஐ Recall செய்து உத்தரவிடக்கோரி இம்மனு உ.வி.மு.ச கட்டளை-18, விதி-17-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.24 18:15:02 +0530

**(1). மனுவின் சுருக்கம்**

இந்த மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மேற்படி வழக்கில் மனுதாரர் விசாரிக்கப்பட்டு மேற்கொண்டு சாட்சிய விசாரணைக்காக போடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் சில ஆவணங்களை தற்போது தாக்கல் செய்துள்ளார். அவை தற்போது தான் மனுதாரருக்கு கிடைத்துள்ளது. அவற்றை குறியீடு செய்ய மனுதாரரான PW.1–ஐ Recall செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. அவ்வாறு Recall செய்யாவிட்டால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டி PW.1–ஐ Recall செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**(2). 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

(i) மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் சரியல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. வாதியை ரீகால் செய்ய சரியான காரணம் குறிப்பிடப்படவில்லை. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இதுநாள் வரை எங்கு இருந்தது, எப்படி கிடைத்தது என்ற எந்த விவரத்தையும் குறிப்பிடாமலும் அந்த ஆவணங்களை உரிய காலத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்ற விளக்கத்தையும், விவரத்தையும் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள அபிடவிட்டில் குறிப்பிட்டு கூறாமல் மனு தாக்கல் செய்துள்ளது சரியல்ல. அதனால் மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள ரீகால் மனு தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. மனுதாரர்/வாதியை ஏற்கனவே எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு முழுவதும் விசாரணை முடிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி குறுக்கு விசாரணையை சீர்குலைக்கும் நோக்கில் ஏற்கனவே குறுக்கு விசாரணையில் பதில் அளிக்கப்பட்ட சங்கதிகளுக்கு விரோதமாக சாட்சியம் ஏற்படுத்தும் நோக்கில் மனுதாரர்/வாதி அவரை மீண்டும் விசாரிக்க வேண்டும் என்ற

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.24 18:15:10 +0530

நோக்கில் ரீகால் செய்ய மனு தாக்கல் செய்துள்ளது தள்ளுபடிக்கு அருகதையாக உள்ளது. மனுதாரர்/வாதி சரியான காரணம் கூறாமல் ரீகால் செய்யவும் ஆவணத்தை குறியீடு செய்யவும் மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல, எனவே இம்மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும். என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

**5. <u>தீர்வு:</u>**

(i) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து, மனுதாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்காக கெடு போடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் சில ஆவணங்களை தற்போது தாக்கல் செய்துள்ளதாகவும், அவை தற்போது தான் மனுதாரருக்கு கிடைத்துள்ளதாகவும், அவற்றை குறியீடு செய்ய மனுதாரரான PW.1–ஐ Recall செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

(ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி (PW.1) முழுமையாக விசாரணை செய்யப்பட்டுவிட்டது என்றும், மனுதாரருக்கு ஆவணங்களை தாக்கல் செய்ய போதிய கால வாய்ப்புகளும், வசதிகளும் வழங்கப்பட்டுள்ள போது அந்த கட்டத்தில் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் இருந்து விட்டு, தற்பொழுது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் என்றும் கோரி மனு தாக்கல் செய்திருப்பது வழக்கை காலம் கடத்தும் நோக்கத்திற்காகத்தான் என்றும், எனவே இம்மனுவினை

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.24 18:15:17 +0530

செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

(iii) மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. எதிர்மனுதாரர்களுக்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பிருப்பதாலும் மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.24 18:15:28 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | - இல்லை - |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | - இல்லை - |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணம் | - இல்லை - |

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.10.24 18:15:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

அசல் வழக்கு எண்.295/2017 ல்
**இடைமனு எண்.04/2025** நாள் 24.10.2025